**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2016–ஆம் ஆண்டு அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான மாநில அரசு விருதுகள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2.1) துறை

அரசாணை (ப) எண்.84

நாள் :28–11–2016
துன்முகி, கார்த்திகை 13,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(ப) எண்.02, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 02–06–2011.
2. அரசாணை(நிலை) எண்.47, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 19–10–2015.
3. அரசாணை(டி) எண்.65, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 16–09–2016.
4. மாற்றுத் திறானளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2841/உ.உ.–பிரிவு/2016, நாள் 15.11.2016.

---------

**ஆணை:**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3–ஆம் நாள் அன்று நடைபெறும் ‘அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தின விழா’வின்போது சிறந்த மாற்றுத் திறனாளிகளுக்கும், அவர்களின் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கும் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று மாற்றுத் திறனாளிகள் நலனுக்கான மாநில அரசு விருதுகள் பெறுபவர்களை தேர்வு செய்ய தேர்வு குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விருதாளர்களை தேர்வு செய்ய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2016–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளினை அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரித்து, விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் கோப்பைகள் வழங்கவும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன.

**5.** மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், **2016**—ஆம் ஆண்டு அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று, விருது வழங்குவதற்கு, சிறந்த நபர்கள்/ நிறுவனங்களை தேர்வு செய்ய, தேர்வு குழு கூட்டம் **15–11–2016** அன்று நடைபெற்றது என்றும், இக்குழு கூட்டத்தில் தேர்வுக்குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளவாறு, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த நபர்கள்/நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்குவதற்கு உரிய ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, **2016** ஆம் ஆண்டு அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று மாநில விருதுகளை மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த கீழ்கண்ட நபர்கள்/ நிறுவனங்களுக்கு **10** கிராம் எடையுள்ள **22** கேரட் தங்கப்பதக்கமும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கலாம் எனவும், அவர்களை சிறப்பிக்க ஆணையிடுகிறது.

| **வ. எண்.** | **விருதின் விவரம்** | **தேர்வு செய்யப்பட்டவர்கள் பெயர்/ நிறுவனம் விவரம் செல்வி/திரு/திருமதி** |
|---|---|---|
| **1.** | சிறந்த பணியாளர் (கை, கால் பாதிக்கப்பட்டோர்) | வெ. சிபிச் சக்கரவர்த்தி, எண்.11/12, செண்பகவள்ளி தெரு, அயனாவரம், சென்னை–600 023. |
| **2** | சிறந்த பணியாளர் (மனவளர்ச்சி குன்றியோர்) | கெ. நர்மதா, சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி, மெர்ரி டியூ ஹில்ஸ், ஜோன்ஸ்புரம், பசுமலை, மதுரை–625 004. |
| **3.** | சிறந்த ஆசிரியர் (பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல்) | கி. தனலட்சுமி ஊன மேலாண்மை மற்றும் சிறப்புக் கல்வியியல் புலம் ராமகிருண்ண மிஷன், விவேகானந்தா பல்கலைக்கழகம், வித்யாலயா அஞ்சல், பெரியநாயக்கன் பாளையம், கோயமுத்தூர். |
| **4.** | சிறந்த ஆசிரியர் (செவித்திறன் பாதிக்கப்பட்டோருக்கு கற்பித்தல்) | த. பமிலா ஜெயக்குமாரி, ஒய்.எம்.சி.ஏ காமக் காதுகேளாதோர் மேல்நிலைப் பள்ளி, விசாலாட்சிபுரம், மதுரை. |

| | | |
|---|---|---|
| **5.** | சிறந்த ஆசிரியர்<br>(மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்தல்) | கு. முத்து கிருஷ்ணன்,<br>சிருஷ்டி சிறப்புப் பள்ளி,<br>பாண்டி–மயிலம் ரோடு,<br>தழுதாளி (PO),<br>திண்டிவனம் (தாலுக்கா),<br>விழுப்புரம். |
| **6.** | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (செவித்திறன் குறையுடையோருக்கு கற்பித்தல் ) | எஸ். சண்முக சுந்தரி,<br>சில்வர் பீச் சிங்காரம் பிள்ளை வித்யாலயா,<br>1, எம்.டி.எச், சாலை, வில்லிவாக்கம்,<br>சென்னை–49. |
| **7.** | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (மனவளர்ச்சி குன்றியோருக்கு கற்பித்தல்) | ம. ஜெபமாலை.<br>அன்பகம் ஆரம்பநிலை பயிற்சி மையம், (MR),<br>ரேஸ்கோர்ஸ் ரோடு,<br>மதுரை–625 002. |
| **8.** | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்த சமூகப் பணியாளர் | S. விஜயகுமார்,<br>3/67, வடக்குகாடு, புள்ளா கவுண்டம்பட்டி,<br>சங்ககிரி, நாமக்கல். |
| **9.** | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த நிறுவனம் | பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளி,<br>11, புனித தாமஸ் ரோடு,<br>பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி–627 002. |
| **10.** | மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனம் | டைட்டான் கம்பெனி லிமிடெட்,<br>கைக்கடிகாரம் பிரிவு,<br>3, சிப்காட் தொழில் வளாகம்,<br>ஓசூர்–635 126.<br>கிருஷ்ணகிரி. |
| **11.** | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் | J. பத்மநாபன், ஓட்டுநர்,<br>பணி எண்.43398,<br>தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்<br>விழுப்புரம். |
| **12.** | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய நடத்துநர் | V. ரவிச்சந்திரன், நடத்துநர்,<br>பணி எண்.CR 2386<br>தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்,<br>சேலம். |

(த.பி.பா)

7. மேற்காணும் விருது பெறும் சிறந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு 10 கிராம் எடையுள்ள 22 கேரட் தங்கப்பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பந்தப்பட்ட நபர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மைச் செயலாளர், போக்குவரத்துத் துறை,சென்னை–9.

**நகல்:**
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.